கடைசியாகக் குறிப்பிடப்பட்ட 16 ஆவது அறிக்கையைப் பொறுத்தவரையில் போதிய அவகாசம் இன்மையால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குப் பதிலாக படியெடுத்த அறிக்கை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் இரண்டு பிரதிகள் சட்டப்பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அவை அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1976–77, 1977–78 ஆம் ஆண்டுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பதினெட்டாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

போதிய அவகாசம் இன்மையால் அறிக்கையின் அச்சிட்ட பிரதிக்குட் பதிலாக படியெடுத்த அறிக்கை உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. அறிக்கையின் இரண்டு பிரதிகள் சட்டப் பேரவை நூலகத்தில் உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு அவை தனியாக அனுப்பி வைக்கப்படும்.

அடுத்து இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75, 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (சிவில்) அறிக்கைகளில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் பத்தொன்பதாவது (ஏழாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஈ) அரசு உறுதி மொழிக் குழு.

Thiru C. Sattanatha Karayalar: Mr. Deputy Speaker, Sir, I submi the Se ond Report of the Assurance commit e for 1981-82.

(5) அறிவிப்புகள்.

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1981) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.